**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 209/2022 தேதி: 09.01.2026**

**வா.சா. 1 – ராஜேந்திரன்**

**5, 6 வது பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

இந்த வழக்கு 2 லக்க சொத்துக்களுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1 வது லக்க சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் எனக்கு ஞாபகம் இல்லை. 2 வது லக்க சொத்து 5 செண்டு அதன் சர்வே எண் எனக்கு ஞாபகம் இல்லை. 3 வது லக்கம் என்ன சொத்து என்பது பற்றிய விபரம் எனக்கு ஞாபகம் இல்லை. 1 வது லக்க சொத்தை பொறுத்து என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது என்னுடைய சொத்து என்று வழக்கு போட்டுள்ளேன். 2 வது லக்க சொத்தை பொறுத்து என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. 3 வது லக்க சொத்தை பொறுத்து பிராதில் எந்தவித பரிகாரமும் கோரவில்லை. 3 வது லக்க சொத்தை எதற்காக வழக்கில் சேர்த்தேன் என்று ஞாபகம் இல்லை. நிருபண வாக்குமூலத்திற்கு விபரம் சொல்லியது நான் தான். 5, 6 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்தேன். அதில் சொல்லப்பட்டுள்ள வம்சாவழி பட்டியலை படித்து பார்த்தேன். அந்த வம்சாவழி பட்டியலில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் சரிதான்.

வழக்கு சொத்தின் ஆதி சுவான்தாரர் வீரபத்திரன் என்றால் சரிதான். வீரபத்திரன் இறந்த பின்னர் தாவா சொத்து உள்ளிட்ட அனைத்து சொத்துக்களையும் முனியாண்டி, திருப்பதி, ராமு ஆகியோர் அடைந்தனர் என்றால் சரிதான். புல எண் 108/2 ல் விஸ்தீரணம் 61 செண்டு. நான் பிராதுடன் தாக்கல் செய்துள்ள வம்சாவழி பட்டியலில் திருப்பதியின் வம்சாவழி பட்டியலை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது அப்பா

திருப்பதியின் மகன் என்றால் சரிதான். திருப்பதியின் மற்றொரு மகன் 1ம் பிரதிவாதி கோபால். 2, 3, 4 பிரதிவாதிகள் திருப்பதியின் மற்றொரு மகன் அழகரின் வாரிசுகள். வீரபத்திரனின் வாரிசுகள் முனியாண்டி, திருப்பதி, ராமு எப்போது இறந்தார்கள் என்று எனக்கு தெரியாது. புல எண். 108/2க்கு செண்டில்மெண்ட் பட்டா ஆதியில் முனியாண்டி, திருப்பதி, ராமு பெயரில் இருந்தது என்றால் சரிதான். அது என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ 1**. முனியாண்டி, திருப்பதி, ராமு ஆகியோருக்கு இடையே வழக்கு சொத்தைப் பொறுத்து பாகம் எப்போது ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. அவர்களுக்குள் ஏற்பட்ட பாகத்தில் யார், யாருக்கு என்ன, என்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது.

வீரபத்திரனுக்கு தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்களும் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தைகளையும் , தாவா சொத்துக்களையும் பதிவு செய்யப்பட்ட பாக பிரிவினை பத்திரம் மூலமாகவோ, நீதிமன்றம் மூலமாகவோ பாகம் பிரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். முனியாண்டி, திருப்பதி, ராமு ஆகியோர்களுக்கு இடையே இன்னும் பிரிக்கபட வேண்டிய சொத்துக்கள் எதுவும் இல்லை. பாகம் பிரித்தது 100 வருடங்களுக்கு மேலே இருக்கும். தாவா சொத்திற்கு எனது அப்பாவிற்கு UDR பட்டா எப்போது வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. முனியாண்டி, திருப்பதி, ராமு அவர்களது வாரிசுகள் எப்போது பாகம் பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த பாகத்தில் யார், யாருக்கு என்ன, என்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் அந்த பாகத்தில் தாவா சொத்து எனது அப்பா கணபதி, அவரது சகோதரர்கள் அழகர், கோபால் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டது. பஞ்சாசரம், பாண்டி, மணி ஆகியோருக்கு எந்த சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று தெரியாது. தாவா சொத்தான 60 செண்டிற்குமே எனது தந்தை பெயரில் பட்டா உள்ளது. எனது அப்பா, அழகர், கோபால் ஆகியோர் 35 வருடங்களுக்கு முன்னர் பாகம் பிரித்து கொண்டார்கள்.

அந்த பாகத்தில் தாவா சொத்தை தவிர யார், யாருக்கு என்ன, என்ன சொத்துக்கள் பிரித்து கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ 1 பட்டாவில் எனது தந்தை பெயருக்கு 55 செண்டிற்கு பட்டா உள்ளது. மீதி உள்ள நிலம் யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் பாண்டி பெயரில் உள்ளது. அந்த 5 செண்டை நான் 8ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தேன். 8ம் பிரதிவாதி, 10 பிரதிவாதி பாண்டிக்கு கிரையம் கொடுத்து தற்போது அவர் பெயரில் உள்ளது.

1 வது லக்க சொத்திற்கு எனது பெயரிலோ, எனது தந்தை பெயரிலோ பட்டா எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1 வது லக்க சொத்து எனக்கு பாத்தியம் என்பதை காட்டுவதற்கு வா.சா.ஆ 1 பட்டாவை தவிர வேறு எந்த ஆவணமும் என் கை வசம் இல்லை. எனது தகப்பனார் 20, 20 செண்டாக சொத்துக்களை பிரித்து கொண்டதாக சொல்லியுள்ளேன். அதில் எனது தகப்பனாருக்கு வடக்கே 20 செண்டு, அதற்கு தெற்கே 1ம் பிரதிவாதிக்கு 20 செண்டு, அதற்கும் தெற்கே 2, 3, 4 பிரதிவாதிகளின் தந்தைக்கு 20 செண்டு பிரிக்கப்பட்டது. அவ்வாறு பிரித்து 40 வருடங்கள் ஆகிறது. தாவா சொத்தில் பட்டாவை எனது தகப்பனார் பெயருக்கு மாற்றுவதற்கு முன்பு பி.வா.சா.ஆ 1 ல் கண்ட கூட்டு பட்டாதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்று எனக்கு தெரியாது. எனது தகப்பனார் பெயருக்கு ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்யக்கோரி 7ம் பிரதிவாதியும், 5ம் பிரதிவாதியும் வருவாய் கோட்டாட்சியருக்கு மனு கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதில் 15.03.2022 ல் வருவாய் கோட்டாட்சியர் ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரிதான். அது என்னிடம் காட்டப்படுவது தான். அது **பி.வா.சா.ஆ 2**. மேற்படி உத்தரவிற்கு பிற்பாடு தான் நான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அது முறையற்ற விசாரணை. அந்த உத்தரவின் பேரில் மாவட்ட வருவாய் அலுவலரிடம் நான் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை.

சேகர், பாண்டிக்கு எழுதி கொடுத்த பத்திரத்தில் நான்கு மால் தவறாக உள்ளது என்று பிராதில் கூறியுள்ளேன். அந்த பத்திரத்தை ரத்து செய்வதற்காக தான் 2 வது பரிகாரம் கோரியுள்ளேன். 2 வது லக்க சொத்து யாருக்கு பாத்தியம் என்று பரிகாரம் கோரவில்லை. தாவா 2 லக்க சொத்தை நானும், எனது தகப்பனாரும் கிரையம் செய்த விபரம் எனது தகப்பனாருக்கும், எனது சகோதரருக்கும் தெரியும் மற்ற வாரிசுகளுக்கு தெரியாது. வீரபத்திரனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பிரித்து விட்டார்கள். ஆனால் அதை யாரும் 3 ம் நபருக்கு கிரையம் செய்யவில்லை. மற்ற குடும்ப சொத்துக்களுக்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் நாங்கள் பிரித்து கொண்ட படி அவர், அவர் வாரிசுகளுக்கு பட்டா உள்ளது. அந்த பட்டாக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அது அடுத்தவர்கள் பட்டா ஆகையால் தாக்கல் செய்ய முடியாது. வீரபத்திரன் வாரிசுகளுக்கு இடையே பாகம் ஆகிவிட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் என்னால் தாக்கல் செய்யமுடியாது. இந்த வழக்கை தயார் செய்ய 1 முதல் 4 , 8 முதல் 10 பிரதிவாதிகள் ஒரே வழக்கறிஞரை பார்த்தோம் என்றால் நாங்களும், 1 முதல் 4 பிரதிவாதிகளும் ஒரே வழக்கறிஞரை பார்த்தோம். 8 முதல் 10 பிரதிவாதிகள் வேறு வழக்கறிஞரை பார்த்தார்கள். செட்டில்மெண்ட் பட்டா 3 நபர்கள் பெயரில் இருந்து எனது அப்பா பெயருக்கு மாறியுள்ளது. அந்த பட்டா மாறுதல் உத்தரவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த உத்தரவு என் கைவசம் இல்லை. தாவா சொத்து வீரபத்திரனின் 3 வாரிசுகளுக்கு கராராக பிரிக்கப்படாத நிலையில் நானும், எனது தந்தையும் 8 முதல் 10 வரை பிரதிவாதிகள் ஏற்படுத்திய கிரையம் சட்டப்படி செல்லாது என்றும், 5 முதல் 7 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. நானும், எனது தந்தையும் 1995 ம் வருடம் கிரையம் செய்த பத்திரத்தின் நான்கு மாலே தவறு என்றும், நாங்கள் பாகம் பிரித்து கொண்டது போல் எங்கள் விருப்பத்திற்கு போட்டுக்கொண்டோம் என்றால் சரியல்ல.

நானும், எனது தந்தையும் விற்ற கிரைய பத்திரம் வா.சா.ஆ 8 அது பூர்விக சொத்து என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும், அந்த பத்திரத்தில் எனது தாத்தா திருப்பதி மற்றும் அவரது சகோதரர்களுக்குஇடையே நடந்த பாகத்தில் எனது தாத்தா திருப்பதி பாகத்திற்கு கிடைத்து அதன் பின்னர் எனது தகப்பனார் பாகத்திற்கு கிடைத்த சொத்து என்று குறிப்பிடப்படவில்லை என்றால் பூர்விக சொத்து என்று தான் குறிப்பிட்டுள்ளோம். வா.சா.ஆ 2 ஆவணத்தை பற்றி கேட்டால் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ 3 ஆவணம் UDR ல் எனது தகப்பனாருக்கு தவறாக ஏற்பட்ட பட்டாவின் அடிப்படையில் போடப்பட்ட ரசீதுகள் தவறானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 4 பட்டாவும், கூட்டுப்பட்டாதார்களுக்கு அறிவிப்பே அனுப்பாமல் மோசடியாக ஏற்பட்ட பட்டா என்றால் சரியல்ல. வா.சா.ஆ 5 சாகுபடி அடங்கல் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்ததால் அது செல்லாது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 2014 ல் இறந்தார் என்றால் சரிதான். எனது தாத்தா திருப்பதி உயிருடன் இருந்தவரை அவர் உடன் பிறந்தவர்கள் ராமு, முனியாண்டி ஆகியோர்களுக்கு இடையே தாவா சொத்துக்கள் சம்பந்தமாக எந்தவித பிரச்சனையும் ஏற்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 9, வா.சா.ஆ 10 கிரைய பத்திரங்கள் 5 முதல் 7 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 2 உத்தரவிற்கு முன்பு நடந்த வருவாய் கோட்டாட்சியர் விசாரணைக்கு எனக்கு வந்த அழைப்பாணை தான் வா.சா.ஆ 11, 12 ஆகும்.

தாவா சொத்து புல எண் 108/2, 61 செண்டு முனியாண்டி, திருப்பதி, ராமு ஆகிய 3 சகோதரர்களுக்கும் பாத்தியமானது என்றால் சரியல்ல. பூமியில் 60 செண்டும் ஒரே சேகரமாக உள்ளது. தாவா 3 லக்க சொத்திற்கு நான் கொடுத்துள்ள நான்கு மால் தவறானது என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் அலுவலர் விசாரணையில் நான், எனது சகோதரர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்கள் வாக்குமூலம் அளித்துள்ளோம் என்றால் நானும், கிராம நிர்வாக அலுவலரும் வாக்குமூலம் கொடுத்தோம். எனது சகோதரர் வரவில்லை.

தாவா சொத்து உள்ளிட்ட அனைத்து சொத்துக்களையும் பொறுத்து வீரபத்திரன் வாரிசுகளை பொறுத்து எந்தவித பாக பிரிவினையும் நடைபெறவில்லை என்றும் ஆகையால் நான் தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரமும், கோரமுடியாது என்றால் சரியல்ல. 5, 6, 7 பிரதிவாதிகள் தாவா சொத்தை பொறுத்து கூட்டு சுவான்தார்களாக இருப்பதால் அவர்களை பொறுத்து உறுத்துக்கட்டளை கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து பாக பிரிவினை பரிகாரம் தான் கோரமுடியும் என்றும், விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ 13 முதல் 16 ஆவணங்கள் தாவா சொத்து எனது தகப்பனாருக்கு பாத்தியம் என்று காட்டக் கூடிய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 17, 18 ஆவணங்களுக்கும், தாவா சொத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ 19 அறிவிப்பு இந்த வழக்கு தாக்கல் செய்த காலத்தில் அனுப்பப்பட்ட அறிவிப்பு. வா.சா.ஆ 20, வா.சா.ஆ 22 முதல் 36 வரை ஆவணங்கள் தாவா சொத்து எனக்கு தனித்து பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் இல்லை என்றும், வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.